# தமிழில்


## தெரிந்துகொள்ள வேண்டிய தெவிட்டாத தகவல்கள்

தொகுப்பு

**கு.ஐங்கரன்**

ஆசிரியர்

(உயரிய பேரார்வக் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொள்ள வேண்டிய
தெவிட்டாத தகவல்கள்
(தமிழக, ஈழத்து இலக்கிய வரலாறுகள்)

C. Nimalaroopan.

# வினாவிடைகள்

*வெளியீடு — 01*

தொகுப்பாசான்
**கு. ஐங்கரன்**

வெளியீடு
**உயரிய பேரார்வ கல்லூரி**
முருங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | - | தெரிந்து கொள்ளவேண்டிய தெவிட்டாத தகவல்கள் |
| ஆசிரியர் | - | குணரட்ணம் ஐங்கரன் |
| பதிப்புரிமை | - | குணரட்ணம் சத்தியப்பிரியா |
| முதற்பதிப்பு | - | ஆனி 2009 |
| அச்சுப்பதிப்பு | - | ஆகாஷ் பிரிண்டஸ் வவுனியா. |
| பிரதிகள் | - | 1000 |
| விலை | - | 150.00 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நான் படித்த போதெல்லாம்
தான் விழித்திருந்த
என் அன்னை புவனத்திற்கு
இப் பனுவல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

"தெரிந்து கொள்ளவேண்டிய தெவிட்டாத தகவல்கள்" என்னும் நூல் வெளிவருவதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இதன் தொகுப்பாசிரியர் திரு. கு. ஐங்கரன் அவர்கள் எமது "கிறிஸ்தரசர் கன்னியர் மடத்தில்" உள்ள மாணவியர்க்கு தமிழினை மிகச் சிறப்பான முறையில் கற்பிக்கும் ஒரு ஆசிரியராவார். இவர் இலக்கண இலக்கிய விடயங்களை திறம்படக்கற்பிப்பதில் சிறந்தவர் என்பதற்கு இவரது மாணாக்கர்களே மிகச்சிறந்த சான்றாதாரமாவார்கள். தான் கற்றதையும் பெற்றதையும் தேடியதையும் அடுத்த தலைமுறையினரும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு உயரிய நோக்கத்தோடு இன்நூலை தொகுத்து வெளியிட்டிருக்கின்றார் என்பதை இந்நூலைப்படித்தவுடன் யாவரும் புரிந்து கொள்வர்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு நூல்கள், வழிகாட்டிகள், கைநூல்கள் என்பன இன்றியமையாதன. கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் திரு. ஐங்கரன் அவர்கள் இலக்கிய இலக்கண விடயங்களை காலத்தின் தேவைக்கேட்ப "நீரொழிய பாலுண் குருபோல" தொகுத்து வெளியிட்டிருக்கின்றார். இந்நூல் தமிழராகப் பிறந்த அனைவருக்குமே பயனுடையதாய் அமையும் என்பது என் கருத்தாகும். அதில் ஐயமுமில்லை. கற்றவர் தான் கற்றதை பிறருக்கும் பகிர்ந்தளிப்பதற்கு நூலும் ஒரு வகையில் உதவும். இப்பணியினை ஆசிரியர் ஐங்கரன் அவர்கள் இளம் வயதினராயினும் துணிவுடன் செய்ததையிட்டு களிப்படைகின்றேன். இவரது அறிவாற்றலின் வெளிப்பாடு சிறப்பாக பிரதிபளிக்கின்ற எனது மாணவியரைக்கண்டு பெருமைப்படுகின்றேன். எனவே இவர் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் இறையாசியுடன் நிறைவேறவும் இவர் இத்துறையில் இன்னும் உழைக்கவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி ஆசிகூறி நிற்கின்றேன்.

**அருட் சகோ.செபஸ்ரி அ.கா.**
கிறிஸ்து அரசர் மாணவியர் இல்லம்.
பொறுப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

மாணவர்கள் தமிழ்மொழிப்பாடத்தில் தமது அறிவுத்திறனை நுணுக்கமான முறையில் விருத்தி செய்வதுடன் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இலக்கிய வரலாறு பற்றிய ஆழ அகல அறிவு அவசியமாக உள்ளது. ஆசிரியரின் இந்நூல்த்தொகுப்பானது இப்பணியினை செவ்வனே செய்துள்ளது. இத் தொகுப்பானது தமிழக தமிழ் இலக்கிய வரலாறு, ஈழத்து இலக்கிய வரலாறு என்பனவற்றின் விடயங்களை உள்ளடக்கிய வினாவிடைத்தொகுதியாக வெளிவருவது பாராட்டத்தக்கதாகும்.

ஆசிரியர் திரு. கு. ஐங்கரன் அவர்கள் தனது கடந்தகால கற்பித்தல் அனுபவத்தில் மாணவர்கள் பரீட்சையிலும் வினாடிவினாப் போட்டிகளிலும் பதிலளிக்கும் போது எதிர்கொள்ளும் சவால்களைக் கருத்தில் கொண்டு போட்டிகளில் உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இலக்கிய வரலாறு தொடர்பான தெரிந்த ஆயிரம் வினாவிடைகளை உள்ளடக்கிய "தெரிந்து கொள்ளவேண்டிய தெவிட்டாத தகவல்கள்" என்னும் தொகுப்பை வெளியிடுகின்றமை மாணவர்களுக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும்.

இளம் வயதினரான ஆசிரியர் இலக்கிய வரலாறு தொடர்பான ஆயிரம் வினாவிடைகளை எதிர்காலத் தலைவர்களான மாணவர்களுக்கு முன்வைத்துள்ளார். இத்தொகுப்பின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் அதிகப்பயனைப் பெற்றுக்கொள்வதுடன் ஆசிரியர்களுக்கும் இது பெரிதும் வழிகாட்டியாகவும் உதவியாகவும் அமையும் என்ற நம்பிக்கையுடன் ஆசிரியரின் இவ்வாறான முயற்சிகள் மேலும் தொடரவும் அவரது கல்விக்கான சேவை சிறக்கவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வீ. மயூரன்** (ஆசிரியர்)
மன்/ சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

**"திரைகடலோடியும் திரவியம் தேடு"** என்ற முதுமொழிக்கு ஏற்ப தேடல் என்பது வாழ்விற்கு இறுதிவரை நிகழ்ந்துகொண்டிருக்கும் நிகழ்வு என்பது தெளிவுறத்தெரிந்த உண்மையாகும். வாழ்வே ஒரு தேடலாய் இருக்கும் இக்காலகட்டத்தில் திகெட்டும் பரவிநிற்கும் தித்திக்கும் தமிழ் மொமிழின் சீர்சிறப்பை எடுத்துக்கூறும் இலக்கியங்களின் அறியாத தெரியாத விடயங்களை அனைவருக்கும் தெளிவுடன் வெளிப்படுத்த எடுத்த முயற்சியின் பயனாக வெளிவரும் **"தெரிந்து கொள்ளவேண்டிய தெவிட்டாத தகவல்கள்"** என்ற நூலிற்கு பாராட்டுரை வழங்குவதில் பெருமையும் மகிழ்வும் அடைகிறேன்.

இயல், அசை, நாடகம் எனும் முத்தமிழ் வடிவிலே தமிழரின் கலை, இலக்கிய, சமய, கலாசார சமூகப்பின்னனிகள் தமிழகத்தின் ஈழத்திலும் நூல்கள், கவிதைகள், நாடகங்கள், காப்பியங்கள், கூத்துக்கள், புராணங்கள் என பலவடிவங்களில் படைக்கப்பட்டு அறிவுக்கு விருந்தாக படைக்கப்பட்டுள்ளன. தொன்மையும் தனித்தன்மையும் கொண்ட தேனினும் இனிய இம்மொழிக்கு மேலும் மெருகூட்டும் வகையில் இதன் சிறப்பினை ஆய்ந்து அறிந்து இந்நூலை வெளியிடும் முயற்சியில் வெற்றிகண்டு இதனை வடிவமைத்து வெளியிடும் திரு. கு. ஐங்கரன் அவர்களை மனமாறப்பாராட்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் பெற்றப் புலவர்கள், வித்துவான்கள், கவிஞர்கள், நாடகாசிரியர்கள், அறிஞர்கள் என பலரும் மேன்மைப்படுத்திய இனிய தமிழ்மொழியின் பெருமை அகிலம் எங்கும் பரவ வாழ்த்தி இந்நூலாசிரியருக்கு வாழ்த்துக்கதைக்கூறி இவரது ஆக்கமுயற்சிகள் மேலும் வளர இறையாசிகளை மகிழ்வோடு கூறிமனதாரபாராட்டி நிற்கின்றேன்.


**திருமதி. P.P.A.பெர்ணான்டோ**

வகுதித்தலைவர் (ஆரம்பப்பிரிவு)

மன்/ புனிதசவேரியார் பெண்கள் கல்லூரி

(தேசிய பாடசாலை)

மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இன்றைய நவீன உலகில் மனிதர்களுக்கிடையேயான தொடர்பாடல்களை இலகு படுத்த பல்வேறு **"ஊடகங்கள்"** கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் உண்மையில் மனிதர்களின் உணர்வுகளுக்கு வடிவம் கொடுக்கும் **"மொழி"** என்ற பாரம்பரிய தொடர்பூடகத்திற்கு நிகராக எந்தவொரு ஊடகமும் போட்டி போடமுடியாது என்று தான் சொல்லவேண்டும். ஏனெனில் நவீன தொடர்பூடகங்களினூடாக ஏதோ ஒரு வடிவத்தில் பரிவர்த்தனைச் செயற்பாடுகளில் மொழிகளின் செல்வாக்கே மேலோங்கியுள்ளன. உலகில் பல்லாயிரக்கணக்கான மொழிகள் பரந்து பட்ட உலகநாடுகளில் வாழுகின்ற மக்களால் பேசப்பட்டாலும் ஒவ்வொரு மொழியும் அம்மொழியைப்பேசுகின்ற குறித்த இனத்தின் தனித்துவத்தையும் இருப்பினையும் பண்பாட்டுப்பாரம்பரிய மரபுசார் விழுமியங்களையும் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகவே விளங்குகின்றன.

எனினும் நவீன கணணி யுகத்தின் வேகமான முன்னோக்கிய பாய்ச்சலுக்கு தாக்குப்பிடிக்க முடியாத பல நூற்றுக்கணக்கான மொழிகள் இன்று படிப்படியாக மரணித்து வருகின்றன என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதனால் வரண்முறையான இலக்கண இலக்கிய வலுவற்ற மொழிகள் இவ்வாறு தொடர்ந்தும் மரணிக்கும் நிலை தொடரலாம் எனவும் மொழியியல் ஆய்வாளர்கள் எச்சரித்தள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நோக்கு நிலையிலிருந்து எமது தாய் மொழியாம் தமிழ் மொழியின் நிலைமையை அவதானிக்கும்போது நாம் மகிழ்ச்சியடையக்கூடியவர்களாகவே உள்ளோம். ஏனெனில் உலகில் உள்ள பலகோடி மக்களால் பேசப்படுகின்ற முக்கியமான மொழிகளுள் நமது தமிழ் மொழியும் பிரதான இடத்தைப் பெறுகிறது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி என்ற புகழுக்குரிய தமிழ்மக்கள் பேசும் மொமியாகிய தமிழ்மொழி காலத்தால் தொன்மையானது. முறையான இலக்கண வரம்புகள் நெறிமுறைகளூடாக முகிழ்த்த உன்னதமான பல இலக்கியங்களை தமிழ் மொழி கொண்டுள்ளமை இதன் பலத்துக்கு மேலும் வலுவூட்டுகின்றது. மேலும் தமிழ் திராவிட மொழிக்குடும்பத்தினுள் தலையாய மொழியாக உள்ளது. தமிழின் மேன்மை காரணமாகவே இன்றைய மொழியியல் உலகம் தமிழை செம்மொழியாக பிரகடனம் செய்துள்ளது. அத்துடன் கணணிகளில் இலகுவாக பயன்கபடுத்தக்கூடிய தகுதிநிலைமொழியாகவும் தமிழ் மொழி இனங்காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் தமிழை நேசிக்கவேண்டும். தமிழ் மொழியில் கல்வி பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியின் வரலாற்றுத்தொன்மை அதன் இலக்கணச்சிறப்பு இலக்கியச்செழுமை தமிழ் மொழியில் இலக்கிய மரபுகளை காலங்காலமாக வளர்த்தெடுத்த புலவர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள், ஆசான்கள் போன்றவர்களையும் அவர்களால் உருவாக்கப்பட்ட இலக்கிய படைப்புக்களைப்பற்றியும் தெளிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருக்கவேண்டியது மிக அவசியமானதாகும். இலங்கையின் கல்விக்கொள்கையில் மாணவர்கள் தமது தாய் மொழியினூடாக கல்வியை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் இன்றும் வலுவாகவே உள்ளன. மாணவர்கள் தாய்மொழியினூடாக கற்கும் கல்வியே அவர்களின் ஆன்மாவை பலப்படுத்தும் எனக் கல்வியாளர்கள் கூறுகின்றார்கள். ஜப்பானியர்களின் வியத்தகு முன்னேற்றத்திற்கு பக்கபலமாக அமைந்தது அவர்களின் தாய் மொழிக்கல்வியே என அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள். தாய் மொழியிற் கல்விபயிலும் மாணவர்கள் தமது தாய் மொழியினை நன்கு பேசவும் வழுவின்றி எழுதவும் தமது எண்ணக்கருக்களை எழுத்துகளில் சரியாக வெளிப்படுத்தவும் தெரிந்திருந்தால் அவர்கள் கற்கின்ற எந்தப்பாடத்தையும் இலகுவாக கற்கவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளவும் இலக்கியங்களைப் படைக்கவும் முடியும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

முருங்கன் பிரதேசத்தில் புதிதாக இயங்கிவரும் உயரிய பேரார்வக்கல்லூரி என்னும் தனியார் கல்வி நிலையத்தில் தமிழ் மொழியை பாடமாகக் கற்பிக்கின்ற ஆசிரியர் திரு. கு. ஐங்கரன் தான் தொகுத்து வெளியிட உள்ள தமிழ் இலக்கிய வினாவிடை தொகுப்பான தெரிந்துகொள்ளவேண்டிய தெவிட்டாத தகவல்கள் என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குமாறு தனது தொகுப்பின் மூலப்பிரதியை என்னிடம் கையளித்தார். அதனை பரிசீலித்தபோது மேற்படி எண்ணங்களே எனது அணிந்துரையின் முதன்மை வரிகளாக அமையவேண்டியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஐங்கரனின் இந்த தேடல் முயற்சி பாராட்டத்தக்கதாகும். இது கடினமான முயற்சியுடன் பொருமையுடனும் செய்யப்பட்டுள்ள தொகுப்பாக்கம் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றுக்காலகட்டங்களான சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு என்ற படிமுறையான கால ஒழுங்கு வரையறைக்குள் நுழைந்து அக்கால கட்டத்திற்குரியதான தமிழ் இலக்கியம் தொடர்பான ஈழத்து இலக்கியங்கள் தொடர்பான ஆயிரம் தகவல்களை நுணுக்கமான வினாவிடை வடிவத்தில் தொகுத்து வழங்கியுள்ளார். இவரது மேற்படி முயற்சியின் அறுவடையான இந்த தெரிந்து கொள்ள வேண்டிய தெவிட்டாத தகவல்கள் என்ற தொகுப்பானது மாணவர்களுக்கு பொதுவாகவும் தமிழ் திறன் போட்டிகளுக்கு சிறப்பாகவும் பயனளிக்கக்கூடிய வகையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது மாணவர்கள் மட்டுமன்றி தமிழ் இலக்கியம் தொடர்பான தகவல்களை அறிய விரும்பும் அனைவருக்கும் இது மிகவும் பயனுடையதாகும்.

இருப்பினும் அகன்ற சமுத்திரம் போன்ற தமிழ் இலக்கிய பரப்பினுள் அனைத்து தகவல்களையும் இது உள்ளடக்கியுள்ளது எனக்கருத முடியாது. ஆசிரியர் ஐங்கரன் அவர்கள் தனது தேடல் முயற்சிக்கு எட்டிய தேவைக்கேற்ற விபரங்களை மாத்திரம் முனைந்து தொகுத்துள்ளார் என்றே கூறவேண்டும். இந்நூலின் தொகுப்பாசிரியரான ஐங்கரனின் முயற்சியை வரவேட்கும் மாணவர்கள் இத்தொகுப்பினை வாசித்து பயனடைந்து அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக தமிழ் மொழியின் சிறப்புக்களைத் தேடியறிய தூண்டப்படுவார்களாயின் அதுவே இத் தொகுப்பாக்கத்திற்கு வெற்றியாக அமையமுடியும்.

பல்வேறு இன்னல்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து தமது கல்வியைத் தொடருகின்ற நமது மாணவர்களுக்கு அறிவுக்கு வலுவூட்டும் இத்தகைய மேலதிகமான வாசிப்பிற்குரிய பயனுள்ள நூல் வெளியிடுதல் நன்மைத்தனமான முயற்சிகளாகவே அமைகின்றன. இது போன்ற நல்ல முயற்சிகளை திரு. ஐங்கரன் அவர்கள் மேலும் முன்னெடுக்கவேண்டுமென ஆசிக்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

**திருமதி. அக்னஸ் பேள் டேவிட்**

B.A (Cey) PGDE-SLTS-I

பிரதி அதிபர்,

மன்/முருங்கன் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வசதிக்காய் பொருள் தேடி வாழ்வோர் தொகையிலும் புகழுக்காய் அறிவு தேடி அலைவோர் தொகை அதிகரித்த இக்காலத்தில் என் நூல்களும் அவர்களுக்கு சிறியதொரு உதவியினைப் புரியும் என்ற நம்பிக்கையில் இந்நூலைப் படைத்திருக்கின்றேன். தமிழ் என்ற சமுத்திரத்தின் கரையோரம் ஒதுங்கி நின்று நான் இட்ட சிறு மேல் நீச்சலே இந்நூல் என்பதை கற்றறிந்த சான்றோர் அறிவர். என்னால் இயன்றவரை சரியாகவும் திருத்தமாகவும் தமிழ் சார்ந்த அறிஞர்களது நூல்களின் உதவியோடும் இந்நூலை தொகுத்து படைத்துள்ளேன்.

"தெரிந்து கொள்ளவேண்டிய தெவிட்டாத தகவல்கள்" என்னும் எனது இந்த நூலானது தமிழ் சார்ந்த இலக்கண இலக்கிய பொது அறிவினை ஊட்டுதற்கும் தமிழ் சார்ந்த வினாடிவினா போட்டிகளுக்கு உதவக்கூடிய வகையிலும் மற்றும் தமிழ் மொழி சார்ந்த இதர தேவைகளுக்கும் உதவக்கூடிய வகையிலும் இந்நூலை தொகுத்திருக்கின்றேன். தமிழ் சார்ந்த அறிவைப் பெற விளையும் அனைத்து தரப்பினருக்கும் இந்நூல் பயனுடையதாய் அமையும் என நம்புகின்றேன்.

தமிழ் சார்ந்த விடயங்களை சாற்றிவிட முனைந்தோர் பலர். சாற்றிமுடித்தோர் யாருமில்லை என்பதை கற்றறிந்த சான்றோர் ஏற்பர். நானும் எடுத்துக்கொண்ட விடயங்கள் எல்லைக்கப்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்திருக்க காலத்தின் தேவைக்கேட்ப தேவையானவற்றைக் கிளைந்தும் தேவையற்றவற்றைக் களைந்துமே கூறியிருக்கின்றேன். இக்குறைபாட்டினை அடுத்துவரும் பதிப்புக்களில் நிவர்த்திசெய்து தருவேன் எனவும் நம்புகிறேன்.

எனது முதற் பிரசவ நூலாகிய **"அணியியல் ஓர் அறிமுகம்"** என்னும் சிறு நூலினை நான் யாழ் மண்ணில் தவழவிட்போது அனைத்துப் பகுதி மாணவர்களும் அதை வரவேற்றமையை நினைவில் நிறுத்திப்பார்க்கின்றேன். அதேபோன்று எனது இந்த நூலுக்கும் அனைத்து மாணவர்களது ஆதரவும் கிடைக்குமென நம்புகிறேன். இந்நூல் ஆக்குவதற்கு தூண்டுகோளாயிருந்த உயரிய பேரார்வக்கல்லூரி நிர்வாகிக்கும் என் சக ஆசிரியர்களுக்கும் எனதருமை மாணவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். இப்படைப்பின் மூலப்பிரதியினைப் பெற்று சரிபார்த்து எனக்கு உட்சாகமூட்டி அணிந்துரை வழங்கிய மன்னார் முருங்கன் மகாவித்தியாலய பிரதி அதிபரும் தமிழ் ஆசிரியருமான **"திருமதி அக்னஸ் பேள் டேவிட்"** அவர்களுக்கும் காலக்கிரமத்தில் அச்சிட்டுத்தந்த **"ஆகாஷ் பிறிண்டஸ்"** நிறுவனத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறி அமைகிறேன்.

**கு. ஐங்கரன்**
ஆசிரியர்
(உயரிய பேரார்வக் கல்லூரி )
முருங்கன் / மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககாலம்

01. தமிழகத் தமிழ் இலக்கிய வரலாற்றின் முதற் காலம் எது?

சங்ககாலம்

02. சங்க காலத்தின் மறு பெயர்கள் யாவை?

இயற்கை நெறிக்காலம்
மூவேந்தர் ஆட்சிக்காலம்
வீரயுகக் காலம்
அவயவிக் கொள்கைக் காலம்
செந்தமிழ்க்காலம்

03. சங்ககால வரையறை யாது?

கி.பி. 1ம் நூற்றாண்டு - கி.பி. 3ம் நூற்றாண்டு வரை

04. சங்ககாலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர்களும் யாவர்?

சேரன்
சோழன்
பாண்டியன்

05. சங்ககாலத்தில் தமிழகத்தில் காணப்பட்ட ஐம்பெரும் நிலங்களும் யாவை?

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

06. குறிஞ்சியும், முல்லையும் முறைமையில் திரிந்து உருவான நிலம் யாது?

பாலை

07. சங்ககாலத்தின் ஆரம்பத்தில் இலக்கியங்களில் குறிப்பிடப்படாத நிலம் யாது?

பாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. குறிஞ்சி நிலக் கடவுள் யார்?
முருகன்

09. முல்லை நிலக் கடவுள் யார்?
மாயோன்

10. மருத நிலக் கடவுள் யார்?
இந்திரன்

11. நெய்தல் நிலக் கடவுள் யார்?
வர்ணணன்

12. பாலை நிலக் கடவுள் யார்?
கொற்றவை

13. ஐ வகை நிலக்கடவுளர்களிலும் பெண் தெய்வம் யார்?
கொற்றவை

14. சங்ககாலத்தில் காணப்பட்டதாகக் குறிப்பிடும் முச்சங்கங்களும் எவை?
முதற்சங்கம்
இடைச்சங்கம்
கடைச்சங்கம்

15. முதற்சங்கம் எங்கே காணப்பட்டது?
தென்மதுரை

16. இடைச்சங்கம் எங்கே காணப்பட்டது?
கபாடபுரம்

17. கடைச்சங்கம் எங்கே காணப்பட்டது?
வடமதுரை

18. முதற் சங்கத்தை நிறுவிவர் யார்?
காய்சின வழுதிப் பாண்டியன்

19. இடைச் சங்கத்தை நிறுவியவர் யார்?
கடுங்கோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கடைச்சங்கத்தை நிறுவியவர் யார்?
முடத்திருமாறன்

21. மலையும் மலைசார்ந்த இடமும் யாது?
குறிஞ்சி நிலம்

22. காடும் காடுசார்ந்த இடமும் யாது?
முல்லை நிலம்

23. வயலும் வயல் சார்ந்த பகுதியும் யாது?
மருதநிலம்

24. கடலும் கடல் சார்ந்த ஆற்றங்கரையும் யாது?
நெய்தல் நிலம்

25. மணலும் மணல் சார்ந்த பகுதியும் யாது?
பாலை நிலம்

26. குறிஞ்சியின் அக ஒழுக்கம் யாது?
புணர்தல்

27. முல்லையின் அக ஒழுக்கம் யாது?
இருத்தல்

28. மருதத்தின் அக ஒழுக்கம் யாது?
ஊடல் (பொய்க்கோபம்)

29. நெய்தலின் அக ஒழுக்கம் யாது?
இரங்கல்

30. பாலையின் அக ஒழுக்கம் யாது?
பிரிதல் / உடன்போக்கு

31. அன்பின் ஐந்திணையில் அடங்காத அக ஒழுங்குகள் யாவை?
கைக்கிளை, பெருந்திணை

32. கைக்கிளையை வேறு எவ்வாறு அழைப்பர்?
ஒருதலைக்காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. பெருந்திணையை எவ்வாறு அழைப்பர்?
பொருந்தாக்காமம்

34. குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுது பெருபொழுதுகளைத் தருக?
கூதிர், சாமம், முன்பனி

35. முல்லை நிலத்திற்குரிய சிறுபொழுது பெருபொழுதுகளைத் தருக?
கார், முன்னிரவு, (மலலை)

36. மருத நிலத்திற்குரிய சிறுபொழுது பெருபொழுதுகளைத் தருக?
வைகறை, விடியல்

37. நெய்தல் நிலத்திற்குரிய சிறுபொழுது பெருபொழுதுகளைத் தருக?
சாயங்காலம் (ஏற்பாடு)

38. பாலை நிலத்திற்குரிய சிறுபொழுது பெருபொழுதுகளைத் தருக?
பின்பனி, நண்பகல், இளவேனில், முதுவேனில்

39. குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்களைத் தருக?
புலி, யானை, கிளி, மயில், வேங்கை, சந்தனமரம், காந்தள், குறவர், வேட்டையாடல்.

40. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருளைத் தருக?
மான், முயல், பசு, கொன்றை, குருத்து, முல்லை, ஆனிரை மேய்தல்.

41. மருத நிலத்திற்குரிய கருப்பொருளைத் யாவை?
எருமை, நாய், மருதமரம், காஞ்சி, தாமரை, உழவு

42. நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருளைத் யாவை?
சுறா, புன்னை, நெய்தல், தாழை, மீன் பிடித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. பாலை நிலத்திற்குரிய கருப்பொருளைத் யாவை?
வாடிய புலி, யானை, பருந்து, கள்ளி, இருப்பை, வழிப்பறி, கொள்ளை

44. குறிஞ்சி நிலத்திற்குரிய உரிப் பொருள் யாது?
கூடுதலும், திருமணத்திற்கு முந்திய களவு வாழ்க்கையும்

45. முல்லை நிலத்திற்குரிய உரிப் பொருள் யாது?
போர், காவல் கருதிய கணவன் பிரிவில் தலைவி துன்பம் ஆற்றியிருத்தல்.

46. மருத நிலத்திற்குரிய உரிப் பொருள் யாது?
பரத்தையிற் தலைவன் பிரிதலால் மனைவி ஊடுதல்

47. நெய்தல் நிலத்திற்குரிய உரிப் பொருள் யாது?
காதலன் பிரிந்த போது காதலி வருந்துதல்

48. பாலை நிலத்திற்குரிய உரிப் பொருள் யாது?
பொருள் வழிப் பிரிவில் அதன் நிமித்தமும் உடன் போக்கும்

49. பரத்தமை ஒழுக்கத்தோடு தொடர்புடைய நிலம் எது?
மருதநிலம்

50. குறிஞ்சி நிலத்து மக்களைப் பொதுவாக எவ்வாறு அழைப்பர்?
குறவர்

51. முல்லை நிலத்து மக்களைப் பொதுவாக எவ்வாறு அழைப்பர்?
ஆயர்

52. மருத நிலத்து மக்களைப் பொதுவாக எவ்வாறு அழைப்பர்?
உழவர்

53. நெய்தல் நிலத்து மக்களைப் பொதுவாக எவ்வாறு அழைப்பர்?
பரதவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. **பாலை நிலத்து மக்களைப் பொதுவாக எவ்வாறு அழைப்பர்?**
மறவர் / எயினர்

55. **"அத்திப்பூமாலை" யாருக்குரியது?**
சோழர்களுக்குரியது

56. **"வேப்பம் பூ மாலை" யாருக்குரியது?**
பாண்டியர்களுக்குரியது

57. **"பனம் பூ மாலை" யாருக்குரியது?**
சேரர்களுக்குரியது

58. **"மீன் கொடி" யாருக்குரியது?**
பாண்டியர்களுக்குரியது

59. **"வில் கொடி" யாருக்குரியது?**
சேரர்களுக்குரியது

60. **"புலிக் கொடி" யாருக்குரியது?**
சேரர்களுக்குரியது

61. **முதல் ஏழு வள்ளல்களும் யாவர்?**
சகரன், காரி, நளனி, துந்துமாரி, நிருதி, செம்பியன், விரான்,

62. **இடை ஏழு வள்ளல்களும் யாவர்?**
அக்குரன், அந்திமான், கண்ணன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன்

63. **கடை ஏழு வள்ளல்களும் யாவர்?**
பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி

64. **பதினெண் மேற் கணக்கு நூல்கள் எவை?**
எட்டுத் தொகை, பத்துப்பாட்டு

65. **எட்டுத் தொகை நூல்களுள் அகம் கூறும் நூல்கள் எவை?**
- குறுந்தொகை
- நற்றினை
- அகநானூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐங்குறுநூறு
- கலித்தொகை

66. எட்டுத் தொகை நூல்களுள் புறம் கூறும் நூல்கள் எவை?
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- புறநானூறு

67. பத்துப் பாட்டு நூல்களுள் அகம் கூறும் நூல்கள் எவை?
- குறிஞ்சிப் பாட்டு
- முல்லைப்பாலை
- பட்டினப்பாட்டு

68. பத்துப் பாட்டு நூல்களுள் புறம் கூறும் நூல்கள் எவை?
- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- கூத்தராற்றுப்படை
- மதுரைக்காஞ்சி
- நெடுநல் வாடை

69. எட்டுத் தொகை நூல்களுள் தொகுத்தவர் பெயர் அறியப்படாத நூல்கள் யாவை?
பரிபாடல், பதிற்றுப்பத்து, புறநானூறு

70. குறுந் தொகையை தொகுத்தவர் யார்?
பூரிக்கோ

71. நற்றினையைத் தொகுத்தவர் யார்?
பன்னாடு தந்த பாண்டியன்

72. அக நானூறைத் தொகுத்தவர் யார்?
உருத்திர சன்மர்

73. ஐங்குரு நாநூறைத் தொகுத்தவர் யார்?
கூடலூர் கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. கலித் தொகையை தொகுத்தவர் யார்?
நல்லந்துவனார்

⅄ பத்துப்பாட்டு நூல்கள் ஆக்கியவர், அடியளவு, பாட்டுடைத்தலைவர் போன்றவற்றைக் குறிப்பிடுக?

75. நூல் : திருமுருகாற்றுப்படை
ஆக்கியவர் : நக்கீரர்
அடியளவு : 317
பாட்டுடைத்தலைவர் : முருகன்

76. நூல் : பொருணராற்றுப்படை
ஆக்கியவர் : முடத்தாமக் கண்ணனார்
அடியளவு : 248
பாட்டுடைத்தலைவர் : கரிகாற்பெருவளத்தான்

77. நூல் : சிறுபாணாற்றுப்படை
ஆக்கியவர் : நல்லூர் நந்தநார்
அடியளவு : 269
பாட்டுடைத்தலைவர் : நல்லியற் கோடன்

78. நூல் : பெரும்பாணாற்றுப்படை
ஆக்கியவர் : கூடிய நூற் உருத்கிரக் கண்ணனார்
அடியளவு : 500
பாட்டுடைத்தலைவர் : தொண்டையான் இளந்திரையன்

79. நூல் : முல்லைப்பாட்டு
ஆக்கியவர் : நற்போதனார்
அடியளவு : 103
பாட்டுடைத்தலைவர் : அகப் பொருள் நூல்

80. நூல் : மதுரைக்காஞ்சி
ஆக்கியவர் : மாங்குடி மருதனார்
அடியளவு : 782
பாட்டுடைத்தலைவர் : தலையானங்கானத்து செருவென்ற நெடுஞ்செலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. நூல் : நெடுநல்வாடை
ஆக்கியவர் : நக்கீரர்
அடியளவு : 188
பாட்டுடைத்தலைவர் : தலையானங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்

82. நூல் : குறிஞ்சிப்பாடல்
ஆக்கியவர் : கபிலர்
அடியளவு : 261
பாட்டுடைத்தலைவர் : ஆரிய அரசன் பிரகலதன்

83. நூல் : பட்டினப்பாலை
ஆக்கியவர் : கடியலூர் உருத்திரக் கண்ணனார்
அடியளவு : 301
பாட்டுடைத்தலைவர் : கரிகாற்பெருவளத்தான்

84. நூல் : மலைபடுகடாம்
ஆக்கியவர் : பெருங் கௌசியனார்
அடியளவு : 583
பாட்டுடைத்தலைவர் : நன்னன் சேய்

85. திருமுருகாற்றுப்படையின் மறு பெயர் என்ன?
புலவராற்றுப்படை

86. மலைபடுகடாம் மறு பெயர் என்ன?
கூத்தராற்றுப்படை

87. ஆற்றுப்படை நூல்களுள் அடிகளால் பெரிய நூல் எது?
மலைபடுகடாம்

88. பாடல் அடியால் பெயர் பெற்ற புதுப்பாட்டு நூல் எது?
மலைபடுகடாம்

89. "தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபில் மகிழ் தனை மறுகின் மதுரையும் வறிதே" எனக் கூறும் நூல் எது?
சிறுபாணாற்றுப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. "முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" எனக் கூறும் நூல் யாது?

சிறுபாணாற்றுப்படை

91. "வஞ்சி நெடும் பாட்டு" என அழைக்கப்படும் நூல் எது?

பட்டினப்பாலை

92. குறிஞ்சி நிலத்தின் புற ஒழுக்கம் யாது?

வெட்சி

93. முல்லை நிலத்தின் புற ஒழுக்கம் யாது?

வஞ்சி

94. மருத நிலத்தின் புற ஒழுக்கம் யாது?

உழிஞை

95. நெய்தல் நிலத்தின் புற ஒழுக்கம் யாது?

தும்பை

96. பாலை நிலத்தின் புற ஒழுக்கம் யாது?

வாகை

97. நிலங்களுக்கூடாக வராத பிறிதான புற ஒழுக்கங்களும் எவை?

காஞ்சித்திணை, பாடாண்திணை

98. நளி இரு முந்நீர் ஏணியாக.......எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்? அது எத்திணையில் அடங்கும்?

வெள்ளைக்குடி நாகனார்

பொதுவியல் - திணை

99. உண்டால் அம்ம....... எனும் பர்லைப் பாடியவர் யார்? அது எத்தினையில் அடங்கும்?

கடலுண்மாய்ந்த இளம் பெரு வழுதி

பொதுவியல் - திணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. “இளையோர் சூடார்.........” எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்? அது எத்திணையில் அடங்கும்?
குடவாயிற் கீர்த்தனார்
பொதுவியல்

➢ பின்வரும் பாடல்களைப் பாடியவர்களைக் குறிப்பிடுக?

101. தே எந் தீம் தொடை : கோவலூர்க்கிழார்

102. யாயும் ஞாயும் யாராகியரோ: செம்புலப் பெயனீரார்

103. கொங்குதேர் வாழ்க்கை : இறையனார்

104. அரும் துயர் உழத்தலின்: ஔவையார்

105. மை அற விளங்கிய : இளநாகனார்

106. மாமலர் முண்டகம் : நல்லந்துவனார்

107. ஊர்க்கால் நிவந்த : கபிலர்

108. பண்டைத் தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
தமிழி

109. “யாதும் ஊரே யாவரும் கேளீர்” எனப் பாடியவர் யார்?
கனியன் பூங்குன்றன்

110. சங்கப் புலவர்க்கு தனிக் கோயில் எங்கே அமைந்துள்ளது?
மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில்

111. நற்றினைப் பா வகை எது?
அகவல்பா

112. குறு முனி, கும்பமுனி, தமிழ்முனி, என்றெல்லாம் அழைக்கப்படுபவர் யார்?
அகத்தியர்

113. காவிரி நதியை கலசத்தில் அடைந்தவர் யார்?
அகத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114. இறைவனிடம் தமிழ் படித்தார் எனக் கூறப்படுபவர் யார்?
அகத்தியர்

115. பொதிகை நலைச் சாரலில் பெரும் காலம் வாழ்ந்தவர்?
அகத்தியர்

116. அகநானூறில் "களிற்றியானை நிரை" எத்தனை பாடல்களைக் கொண்டது?
நூற்று இருபது பாடல்கள்

117. "பொது நோக்கு ஒழி மதி புலவர் மாட்டே" எனப் பாடியவர் யார்?
கபிலர்

118. "கல்வி வல்லார் கண்டகலி" என சிறப்பிக்கப்படும் நூல் எது?
கலித் தொகை

119. பலா மரம் தொடர்பு படும் நிலம் எது?
குறிஞ்சி

120. "நடுவன் ஐந்திணை" என்பது எந்தத் திணை?
பாலைத்திணை

121. பாடல் இறுதியில் துறை, வண்ணம், தூக்கு, பற்றிய குறிப்பு தரும் நூல் எது?
பதிற்றுப்பத்து

122. ஆசிரியப்பாவின் ஓசை எது?
அகவலோசை

123. "உன்பது நாதி; உடுப்பவை இரண்டே" எனப்பாடடியவர் யார்?
நக்கீரர்

124. ஏழு நரம்புகளைக் கொண்டயாழ் எது?
செங்கோட்டு யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125. பதினான்கு நரம்புகளைக் கொண்ட யாழ் எது?
சகோடயாழ்

126. ஆயிரம் நரம்புகளை கொண்ட யாழ் எது?
ஆதியாழ்

127. ஆண்களின் சிறப்பினைப் புகழ்ந்து பாடும் திணை எது?
பாடான்திணை

128. "எருமை" எந்நிலத்திற்குரியது?
மருதநிலம்

129. "நீர்க்காக்கை" எந்நிலத்திற்குரியது?
நெய்தல் நிலம்

130. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனக் கூறும் நூல் எது?
புறநானூறு

131. "பாண்டி நன்னாடுடைத்து நல்ல தமிழ்" என்று பாடியவர் யார்?
ஔவையார்

132. "வாழ்தல் அன்ன காதல், சாதல் அன்ன பிரிவரியோளே" அக் கூற்று யாருக்குரியது?
தலைவனுக்குரியது

133. முத்தமிழும் யாவை?
இயல், இசை, நாடகம்

134. முக்கனிகளும் எவை?
மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்

135. மும் மலங்களும் எவை?
ஆணவம், கன்மம், மாயை

136. "ஞானக் குரல்" நூலின் ஆசிரியர் யார்?
ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. வஞ்சிப் பாவின் சீர் எது?
கனிச்சீர்

138. ஈற்றசைச் சீரை வேறு எப்படி அழைப்பார்?
ஆசிரிய உரிச்சீர்

130. இளமையில் முதுமை பெற்ற புலவர் யார்?
ஔவையார்

140. "தமிழெனும் அளப்பருஞ் சலதி" தந்தவர் யார்?
அகத்தியர்

141. அகநானூறு எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
மூன்று

142. "மன்னன் உயரத்தே மலர் தலை உலகம்" எனக் கூறும் நூல் எது?
புறநானூறு

143. வெற்றி பெற்றோர் சூடும் பூ எது?
வாகை

144. கற்போடு தொடர்புடைய பூ என்ன?
முல்லை

145. "கொடுப்போர் ஏத்திக் கொடார்ப்பழித்தல்" இது எத்திணைக்கு உரியது?
பாடாண்திணைக்குரிய துறை

146. குறுந் தொகை என சிறப்பிக்கப்படும் நூல் எது?
வெற்றி வேட்கை

147. காய்ச்சீர் எந்தப்பாவிற்குரியது?
வெண்பா

148. கொல்லி மலையை ஆண்ட வள்ளல் யார்?
ஓரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. “செல்வத்துப் பயனே ஈதல்” என்று கூறும் நூல் எது?
புறநானூறு

150. “கூடற்றமிழ்” என்றழைக்கப்படும் நூல் எது?
மதுரைக்காஞ்சி

151. வெண்பாவின் ஓசை எத்தகையது?
செப்பலோசை உடையது

152. பெண் கொலை புரிந்தவன் யார்?
நன்னன்

153. மன்னன் காணும் படியாக நடிக்கும் நாடகத்தின் பெயர் என்ன?
வேத்தியல்

154. நெஞ்சாற்றுப்படை என்றழைக்கப்படும் நூல் எது?
முல்லைப்பாட்டு

155. பெண்களின் பருவங்கள் எத்தனை?
ஏழு

156. மூதுரை என்றழைக்கப்படும் நூலின் பெயர் என்ன?
வாக்குண்டாம்

157. கங்கை மைந்தன் என்று சிறப்பிக்கப்படுபவன் யார்?
தரும புத்திரன்

158. பண் வகுக்கப்பட்ட சங்க நூல் எது?
பரிபாடல்

159. விநாயகர் அகவல் பாடியவர் யார்?
ஔவையார்

160. கைந்நிலை பாடியவர் யார்?
புல்லங்காடனார்

161. பாரதப் போரின் போது உணவு வழங்கியவன் யார்?
உதியன் சேரலாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162. "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" எனப் பாடிய மன்னன் யார்?
குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

163. அகமா? புறமா? என்ற கேள்விக்கு காரணமாக நெடுநல்வாடை எனும் இலக்கிய பாடலடி எது?
"வேம்பு தலையாத்த நோன் காழ் எ·கம்"

164. பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவிக்கும் நூல் யாது?
ஆற்றுப்படை

165. மூவேந்தர்களும் ஒருங்கிருந்த போது பாடிய புலவர் யார்?
ஔவையார்

166. "அற்றைத்திங்கள் அவ் வெண்ணிலவில்" எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
பாரி மகளிர்

167. "முருகு" என்பதன் பொருள் யாது?
அழகு

168. தமிழில் கிடைத்துள்ள தொன்மையான இசை நூல் யாது?
பரிபாடல்

169. "கச்சி" என அழைக்கப்படும் நகரம் யாது?
காஞ்சிபுரம்

170. "ஈழத்து உணவும் காளகத்து ஆக்கமும்" எனும் அடி இடம் பெறும் சங்க நூல் யாது?
பட்டினப்பாலை

171. "கோவலர்" எந்நிலத்து மக்கள்?
முல்லை

172. முருகன் ஆடும் கூத்து யாது?
"துடிக் கூத்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

173. சிவன் ஆடும் கூத்து யாது?
கொடு கொட்டி

174. பாக்களால் சிறப்புப்பெற்ற சங்க இலக்கியங்கள் எவை?
பரிபாடல், கலித்தொகை

175. "வழுதி" என்பது யாரைக் கறிக்கும்?
பாண்டியரைக் குறிக்கும்

176. மனைவி இறந்ததிற்காக கையறு நிலை பாடியவன் யார்?
சேரமான் கோட்டம்பலத்து துஞ்சிய மாக்கோதை

177. "பலர் துஞ்சவும் தான் துஞ்சான்" என்பவன் யார்?
சோழன் நலங்கிள்ளி

178. நெடுந் தெருவில் தேர் வழங்கினான் என்பவன் யார்?
நம்பி நெடுஞ்செழியன்

179. "ஈன்று புறம் தருதல் என் தலைக் கடனே" எனப்பாடியவர் யார்?
பொன்முடியார்

180. ஆரிய மன்னன் பிரகத்தனுக்கு தமிழ் அறிவுறுத்த எழுந்த நூல் எது?
குறிஞ்சிப்பாட்டு

181. கிரௌஞ்சம் என்பதன் பொருள் என்ன?
கிளி

182. பட்டினப்பாலையின் ஆராய்ச்சி உரையாசிரியர் யார்?
மறைமலை அடிகளார்

183. முல்லைப்பாட்டு இலக்கியத்தின் ஆராச்சி உரையாளர் யார்?
மறைமலை அடிகளார்

184. பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தைப் பாடியவர் யார்?
குமட்டூர் கண்ணனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

185. பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தைப் பாடியவர் யார்?
பாலை கௌதமனார்

186. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தைப் பாடியவர் யார்?
காப்பியாற்றுக் காப்பியனார்

187. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடியவர் யார்?
பரணர்

188. பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தைப் பாடியவர் யார்?
காக்கைப்பாடினியர்

189. பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தைப் பாடியவர் யார்?
கபிலர்

190. பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தைப் பாடியவர் யார்?
அரிசில்கிழார்

191. பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தைப் பாடியவர் யார்?
பெருங்குன்றூர்க்கிழார்

192. பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவர் யார்?
தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை

193. ஏறு தழுவுதல் எந்த நிலத்திற்குரியது?
முல்லை

194. சேனாவரையர் எனப்படுவோர் யார்?
படைத்தலைவர்

195. ஆற்றுப்படுத்தும் பாடல்கள் பதிற்றுப்பத்தில் எத்தனை காணப்படுகின்றன?
ஏழு

196. ஆற்றுப்படுத்தும் பாடல்கள் புறநானூற்றில் எத்தனை காணப்படுகின்றன?
பதின்மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

197. நெடுந்தொகை என்னும் அகநானூறை தொகுத்தவர் யார்?
உத்திரசன்மனார்

198. ஐந்து நிலங்களுக்கும் தனித்தனியே நூறு பாடல்களைக் கொண்ட எட்டுத் தொகை நூல் எது?
ஐங்குறு நூறு

199. ஐங்குறு நூறு என்னும் இலக்கியத்தில் அதிகளவு வாழ்த்தப்படும் மன்னர் யார்?
வாழியாதன் (சேரன்)

200. திணை மயக்க எட்டுத் தொகை நூல் எது?
ஐங்குறு நூறு

201. சங்க காலத்திற்குப் பிற்பட்ட செய்யுள்கள் காணப்படும் எட்டுத் தொகை நூல் எது?
கலித் தொகை

## சங்கமருவிய காலம்

202. சங்கமருவிய காலத்தை வரையறை செய்க?
கி.பி 3ம் நூற்றாண்டில் - 6ம் நூற்றாண்டு வரை

203 சங்கமருவிய காலத்தின் மறு பெயர்கள் எவை?
களப்பிரர் ஆட்சிக்காலம்
இருண்ட காலம்
அறநெறிக் காலம்

204. களப்பிரர் ஏறக்குறைய தமிழகத்தை எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தனர்?
நூறு ஆண்டுகள்

205. தமிழகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் வடமொழிச் செல்வாக்கிற்கு உட்படும் முதற்காலம் யாது?
சங்கமருவிய காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206. இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுவன யாவை?
சிலப்பதிகாரம், மணிமேகலை

207. சாதாரண குடிமக்களை பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு முதற்தோன்றிய காப்பியம் எது?
சிலப்பதிகாரம்

208. முத்தமிழ் காப்பியம் என அழைக்கப்படும் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்

209. பிரிந்து கிடந்த தமிழகத்தை ஒற்றுமைப்படுத்திய காப்பியம் என சிறப்பிக்கப்படுவது எது?
சிலப்பதிகாரம்

210. சிலப்பதிகாரத்தைப் பாடியவர் யார்?
இளங்கோவடிகள்

211. சிறந்த கலைக்காப்பியமாகவும் நெஞ்சை அள்ளும் காப்பியமாகவும் கொள்ளப்படும் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்

212. சிலப்பதிகாரத்தில் காணப்படும் காண்டங்கள் காதைகளைத் தருக?
காண்டங்கள் - மூன்று
காதைகள் - முப்பது

213. சிலப்பதிகாரம் கூறும் சமயக்கருத்து எச்சமயத்திற்குரியது?
சமணசமயத்திற்குரியது

214. இளங்கோவடிகளின் அண்ணன் யார்?
சேரன் செங்குட்டுவன்

215. சேரன் செங்குட்டுவன் எந்த அரச பரம்பரையைச் சேர்ந்தவன்?
சேரர்

216. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த குழந்தை யார்?
மணிமேகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

217. சங்கமருவிய கால பரத்தமை ஒழுக்கத்தைப் போக்க பயன்பட்டதாய் குறிப்பிடப்படும் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்

218. விதியின் வலிமையை விளக்கும் மருவிய காலக் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்

219. பெருங் காப்பியங்கள் ஐந்தினுள்ளும் காலத்ததால் முந்திய காப்பியங்கள் எவை?
சிலப்பதிகாரம், மணிமேகலை

220. தமிழ் நாட்டுக் கதையைக் கூறும் பெருங்காப்பியங்கள் எவை?
சிலப்பதிகாரம், மணிமேகலை

221. கண்ணகி பிறந்த நாடு எது?
சோழ நாடு

222. கண்ணகி நீதி கேட்ட நாடு எது?
பாண்டிய நாடு

223. கண்ணகிக்கு கோவிலமைத்த நாடு எது?
சேரநாடு

224. மணிமேகலை எனும் காப்பியத்தின் பாட்டுடைத்தலைவர் யார்?
மணிமேகலை

225. மணிமேகலை எனும் காப்பியத்தைப் பாடியவர் யார்?
சாத்தனார்

226. மணிமேகலை எனும் காப்பியம் எந்த மதத்திற்குரியது?
பௌத்தமதம்

227. மணிமேகலை எனும் காப்பியம் எத்தனைக் காதைகளைக் கொண்டது?
முப்பது காதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

228. மணிமேகலையை விரும்பியவன் பெயர் என்ன?
உதயகுமாரன்

229. சிலப்பதிகாரக் காவியத்தின் தொடர்ச்சிக் காவியம் எது?
மணிமேகலை

230. துறவு உயிர்நாடியாக அமையும் காப்பியம் எது?
மணிமேகலை

231. மணிமேகலையின் குருவாகக் குறிப்பிடப்படுபவர் யார்?
அறவண அடிகள்

232. சங்கமருவிய காலத்தில் அறம், பொருள், இன்பம் என்னுமிவற்றில் அமைந்த நூல்களை எவ்வாறு அழைப்பர்?
பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

233. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறம் கூறும் நூல்கள் எவை?
நாலடியார், நான் மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி.

234. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகம் கூறுவன யாவை?
கைந்நிலை, கார்நாற்பது, ஐந்திணைஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது

235. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் புறம் கூறும் நூல் எது?
களவழி

236. சங்கமருவிய காலத்தில் பக்தி என்னும் பாடுபொருளைத் தோற்றுவித்தவர் யார்?
காரைக்கால் அம்மையார்

237. நாலடியாரைத் தொகுத்தவர் யார்?
பதுமனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

238. நாலடியாரில் எத்தனை அதிகாரங்கள் உள்ளது?
நாற்பது

239. நாலடியாரில் இரு செய்யுள்களில் குறிப்பிடப்படுபவர் யார்?
பெரு முத்தையர்

240. நான்கு அடிகளில் பாடல்களைக் கொண்ட மருவிய அறநூல் எது?
நாலடியார்

241. திருக்குறளைப் பாடியவர் யார்?
திருவள்ளுவர்

242. ஈரடி இயல்புடைய கீழ்க்கணக்கு நூல் யாது?
திருக்குறள்

243. திருக்குறளின் முப்பெரும் பிரிவுகளும் எவை?
அறத்துப்பால், காமத்துப்பால், பொருட்பால்

244. திருக்குறலின் எத்தனை அதிகாரங்கள், குறள்கள் உள்ளன?
அதிகாரங்கள் - 133

குறள்கள் - 1330

245. திருக்குறலின் எத்தனை வட சொற்கள் காணப்படுகின்றன?
150 வட சொற்கள்

246. திருக்குறலின் எத்தனை வேர்ச் சொற்கள் காணப்படுகின்றன?
750 வேர்ச் சொற்கள்

247. முக்காலத்திலும் பொய்யா நூல் எனப் போற்றப்படும் நூல் யாது?
திருக்குறள்

248. திருக்குறளுக்கு மிகச் சரியான பொருளைத் தந்தவர் எனச் சிறப்பிக்கப்படுபவர் யார்?
பரிமேழலகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

249. திணை ஒன்றிற்கு பன்னிரு செய்யுட்கள் வீதம் பாடப்பெற்ற நூல் யாது?
கைந்நிலை

250. களவழி என்னும் நூலைப் பாடியவர் யார்?
பொய்கயர்

251. ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு பழமொழி கூறும் கீழ்கணக்கு எது?
பழமொழி நானூறு

252. முதல் மூவாழ்வார்களும் யாவர்?
பொய்கையாழ்வார்
பூதத்தாழ்வார்
பேயாழ்வார்

253. காரைக்கால் அம்மையார் பாடிய இலக்கியங்கள் யாவை?
அற்புதத்திருவந்தாதி
திருவிரட்டை மணிமாலை
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

254. காரைக்கால் அம்மையார் பாடிய இலக்கியங்களில் மொத்தம் எத்தனை செய்யுட்கள் உள்ளன?
140 செய்யுட்கள்

255. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒரே ஒரு புற நூல் எது?
களவழி நாற்பது

256. தொல்காப்பியம் "உரிப்பொருள்" என்று எதனைக் குறிக்கின்றது?
ஒழுக்கம்

257. தொல்காப்பியம் எத்தனை இயல் களைக் கொண்டது?
இருபத்து ஏழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

258. தொல்காப்பியம் கூறும் சார்பெழுத்துக்கள் எத்தனை?
இரண்டு

259. தொல்காப்பியம் குறிப்பிடும் குறிகள் எத்தனை?
இரண்டு

260. தொல்காப்பியம் குறிப்பிடும் வனப்புக்கள் எத்தனை?
எட்டு

261. தமிழில் கிடைத்த தொன்மையான இலக்கண நூல் எது?
தொல்காப்பியம்

262. தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் எத்தனை?
எட்டு

263. தொல்காப்பியம் குறிப்பிடும் "காஞ்சி" எதைப்பற்றியது?
நிலையாமை பற்றியது

264. தொல்காப்பிய பாயிரம் பாடியவர் யார்?
பனம்பாரனார்

265. தொல்காப்பியத்திற்கு முதல் உரை எழுதியவர் யார்?
இளம்பூரணார்

266. "நண்டும் தும்பியும் நான் கறி வினவே" எனக் கூறும் நூல் எது?
தொல்காப்பியம்

267. "ஐந்திணை எழுபது" என்ற நூலை பாடியர் யார்?
மூவேதியார்

268. "இன்னா நாற்பது" பாடியவர் யார்?
கபிலர்

269. "இனியவை நாற்பது" பாடியவர் யார்?
பூதஞ்சேத்தனர்

270. "கார் நாற்பது" பாடியர் யார்?
மதுரைக் கண்ணங்கூத்தனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

271. "ஐந்திணை ஐம்பது" ஆசிரியர் யார்?
மாறன் பொறையனார்

272. "சிறு பங்சமூலம்" ஆசிரியர் யார்?
காரியாசான்

273. "ஆசாரக் கோவை" என்ற நூலின் ஆசிரியர் யார்?
பெருவாயின் முள்ளியார்

274. "திரிகடுகம்" என்ற நூலின் ஆசிரியர் யார்?
நல்லாதனார்

275. "திணைமாலை நூற்றைம்பது" என்ற நூலின் ஆசிரியர் யார்?
கணிமேதாவியர்

276. "களத்து" என்ற சொல்லைக் கொண்டு முடியும் நூல் எது?
களவழி

277. அதிகம் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல் எது?
திருக்குறள்

278. கண்ணகி வரலாற்றை இளங்கோவடிகளுக்க கூறியவர் யார்?
சீத்தலைச் சாத்தனார்

279. ஆபுத்திரனுக்கு அட்சய பாத்திரத்தைத் தந்தது யார்?
சிந்தா தேவி

280. களப்பிரர்களைப் பற்றிக் குறிப்பிடும் பக்தி நூல் எது?
பெரியபுராணம்

281. எந்த நூலுக்கு பதின்மர் உரைகள் எழுதப் பெற்றன?
திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

282. "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம் மால்" என்று கூறும் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்

283. மணிப்பிரவாள நடையை வளர்த்தவர்கள் யார்?
சமணர்கள்

284. தொல்காப்பியம் யார் தலைமையில் அரங்கேற்றப்பட்டது?
அதங்கோட்டாசான்

285. முத்தரையர்கள் என்னும் குறுநில மன்னர்களை பற்றிக் குறிப்பிடும் நூல் எது?
நாலடியார்

286. தொல்காப்பியம் குறிப்பிடும் வேந்தன் யார்?
இந்திரன்

287. மணிமேகலையின் முற்பிறப்பு பெயர் யாது?
இலக்குமி

288. மாதவிக்கு மன்னனால் வழங்கப்பட்ட பட்டம் யாது?
தலைக்கோல்

289. உதய குமாரனின் முற் பிறப்புப் பெயர் யாது?
இராகுலன்

290. கோவலனின் முற் பிறப்புப் பெயர் யாது?
பரதன்

291. மணிமேகலையின் தோழி பெயர் யாது?
சுதமதி

292. "தெய்வர் தெளிமின்; தெளிந்தோர் பேணுமின்" எனக் கூறியவர் யார்?
இளங்கோவடிகள்

293. கண்ணகியின் காற்சிலம்பின் பரல் யாது?
மாணிக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294. கோப்பெருந்தேவியின் காற்சிலம்பின் பரல் யாது?
முத்து

295. சாயசண்டிகையை தாக்கிய நோய் யாது?
யானைத்தீனி என்னும் கொடும் பசி நோய்

296. ஆதிரையிடம் பிச்சை பெற்றவள் யார்?
மணிமேகலை

297. "மதுராபதி" என்ற தெய்வம் இடம் பெறும் இலக்கியம் யாது?
சிலப்பதிகாரம்

298. பத்தினித் தெய்வ வழிபாட்டை ஈழத்தில் அறிமுகம் செய்த மன்னன் யார்?
கஜபாகு

299. வச்சிரநந்தி சங்கத்தினை மதுரையில் நிறுவியவர்கள் யார்?
சமணர்கள்

300. "திருக்குறள் ஆராய்ச்சி" எழுதியவர் யார்?
மறைமலை அடிகள்

301. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் யாது?
புனிதவதியார்

## பல்லவர் காலம்

302. பல்லவர் ஆட்சிக் காலம் யாது?
கி.பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9ம் நூற்றாண்டு வரை

303. பல்லவர் காலத்தின் ஆரம்பத்தில் பல்லவர்களோடு சேர்ந்து ஆட்சி புரிந்த மன்னர்கள் யாவர்?
பாண்டியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

304. பல்லவர் காலத்தினை வேறு எவ்வாறெல்லாம் அழைப்பர்?
பக்தி நெறிக்காலம்
உணர்ச்சிக் கொள்கைக்காலம்
பக்தி இலக்கிய காலம்

305. பல்லவர் காலத்தில் தேவாரங்கள் பாடியவர்கள் யாவர்?
திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரர்

306. அடங்கன் முறையில் அடங்குவன யாவை?
தேவாரங்கள்

307. தேவாரம் என்பதன் பொருள் என்ன?
இறைவனுக்கு சூட்டப்படும் பாமாலை

308. 1 - 3ம் திருமுறைகள் பாடியர் யார்?
திருஞானசம்மந்தர்

309. திருஞானசம்மந்தர் பாடிய முதல் தேவாரம் யாது?
"தோடுடை செவியன் - - -"

310. திருஞானசம்மந்தர் எத்தனை வயதுகள் வரை வாழ்ந்தார்?
